① 2nd copy

A11

உங்கள் 24.4.68 கடிதத்தின் சிலகேள்விகளுக்கு பதில்கள்

4வது கேள்வி.

பதில்: எல்லா ஜாதியிலும் திருமண காலங்களில் மணப்பெண்ணுக்கு கருப்பு நிறமுள்ள சீலை கட்டமாட்டார்கள். மற்ற எல்லாவிதமான கலர் சீலைகளையும் கட்டுவார்கள். மற்றபடி குறிப்பிட்ட கலர் உள்ள சீலைதான் கட்ட வேண்டுமென்ற முறை இல்லை.

5வது கேள்வி.

பதில்: சீர்களில் உபயோகப்படுத்தும் பானைகளையோ மற்ற பொருள்களையோ கிணற்றில் போடும் பழக்கம் இங்கு அதிகமாக இல்லை. பிராமணர் கல்யாணங்களில் கல்யாணம் முடிந்ததும் நவதானியங்களால் முளைக்க வைத்த மொளப்பாலிகையை கிணற்றில் கொண்டுபோய் விடுவார்கள். இதுபோல் கோமுட்டி செட்டியார் கல்யாணங்களிலும் நடைபெறும். ஈஸ்வரன் கோவில் விசேஷத்தின் பொழுதும் இதேபோல் விசேஷம் முடிந்ததும் மொளப்பாலிகையைக் கொண்டுபோய் கிணற்றில் போடுவார்கள்.

பிறகு, மாரியம்மன் கோவில் விசேஷத்தின் பொழுது விசேஷம் முடிந்ததும் கம்பம் கொண்டுபோய் கிணற்றில் போட்டதும், விசேஷத்திற்கு சாமிகளுக்கு கட்டியிருந்த கங்கணங்களையும், பண்டாரத்திற்கு கட்டியிருந்த கங்கணத்தையும் கிணற்றில் போடுவார்கள். இதேபோல் மாகாளியம்மன் விசேஷம் முடிந்து கம்பம் கிணற்றில் விட்டதும் கங்கணைகளையும் கிணற்றில் போடுவார்கள். பிறகு, இரண்டு ~~இணை~~ தெய்வங்களுக்குமே மேற்கண்ட சீர் நடக்கும் போது ஒரு வெற்றிலையில் சூடம் வைத்துப் பொருத்தி கிணற்றில் பூஜை செய்துவிட்டு, அந்த சூடம் எரிவதுடன் அப்படியே எடுத்து கிணற்றுத் தண்ணீரில் விடுவார்கள். மற்றும், ஒரு ஜோதிடன் வந்து யாரோ ஒருவருக்கு ஜோதிடம் சொல்லும் போது "உங்களுக்கு கிரகம் இருக்கிறது. ஆகையால், நீங்கள் பிள்ளையாருக்கு (கணேஸ்) 12 நாளைக்கு தினமும் ஒரு குடம் தண்ணீர் கொண்டு போய் பிள்ளையார் மேல் ஊத்தி கும்பிட்டு வாருங்கள். 13வது நாள் அன்று ஒரு புதிய மண்பானையில் பொங்கல் வைத்து பிள்ளையார் முன் வைத்து கும்பிட்டு விட்டு அந்த சாதத்தை யெடுத்து அங்குள்ள சிறுவர், சிறுமிகளுக்கு கொடுத்து விட்டு அந்தப்பானையை கிணற்றில் போட்டு விடுங்கள். உங்கள் கிரகம் நீங்கிவிடும்" என்று சொன்னால் அதன்படி அம்மனிதர் செய்து கடைசியில் அந்தப்பானையை கிணற்றில் போடுவார். இதுபோல் பிராமணர் இறந்த சீரின் போது சில சாத உருண்டைகளை கிணற்றில் போடுகிறார்கள்.

இது தவிர வேறு ஜாதிகளிலோ, வேறு சீர்களிலோ உபயோகப்படுத்தும் பொருள்களை கிணற்றில் போடுவதாக எனக்குத் தெரியவில்லை. அந்த மாதிரி இருக்காது என்றும் நான் நினைக்கிறேன்.

குறிப்பு:

மேற்கண்ட பொருள்களை கிணற்றில் போடுவதால் அந்தப் பொருள்களை கிணறு குளிர்ச்சி, அல்லது சூடு செய்வதென்பதோ அல்லது அந்தப் பொருள்களால் கிணற்றுக்கு சூடு அல்லது குளிர்ச்சி ஏற்படுமென்பதோ முறை இல்லை. அப்படிப்பட்ட காரணம் ஒன்றுமில்லையென்றே நான் நினைக்கிறேன். மேற்கண்ட பொருள்களையெல்லாம் கிணற்றில் போடுவதால் கிணற்றில் உள்ள தண்ணீர் தான் அசுத்தமாகுமே தவிர, அதனால் நன்மையேதும் இல்லை என்றே நான் நினைக்கிறேன்.

மேற்கண்டவைகள் எல்லாம் மனிதர்களின் பழக்கமோ அல்லது சாஸ்திர முறையோ தெரியவில்லை.

18 வது கேள்வி.

பதில்: ஒருவர் இறந்து விட்டால் அவனுக்கு மூத்தவனானவன் இறந்து போன தம்பிக்கு கோடி போட வேண்டும். அவனுடைய மனைவி வாய்க்கரிசி இத்து வைக்க வேண்டும். தவிர, இறந்து போனவனுக்கு ஆண் குழந்தை இல்லாமலிருந்தால் இறந்து போனவனின் அண்ணன் மகன், அல்லது தம்பி மகன் கொல்லி வைக்கும் சீர் செய்யலாம். அவர்களுக்கும் ஆண் குழந்தையில்லா விட்டால் இறந்து போனவனுக்கு மூத்த அண்ணன் தான் கொல்லி வைக்கும் சீர் செய்ய வேண்டும். மற்றபடி தலையை மொட்டை அடித்துக் கொள்ளமாட்டார். கொல்லி வைத்தவர் முகசவரந்தான் செய்து கொள்வார். இக்காலத்தில் யாரும் மொட்டை அடித்துக் கொள்வதில்லை.

7 வது கேள்வி.

பதில்: மாரியம்மனுக்கு துணிகள் அணியாமல் இருக்கும் போதும், துணிகள் அணிந்திருக்கும் போதும் நாம் பார்த்தால் நம் கண்ணுக்கும், கற்பனைக்கும் அதை ஒரு பெண் தெய்வமாகவே பார்க்கிறோம். தவிர, வேறு எதையும் நாம் நினைக்கவும் முடியாது பார்க்கவும் முடியாது. மற்றபடி மாரியம்மனின் உருவப்படத்தை அப்படியே ~~[illegible]~~ வரைந்து அனுப்பியுள்ளேன் பாருங்கள்.

மாரியம்மன், பத்ரகாளி இரண்டுக்கும் அமைப்பு வித்தியாசம் உண்டு. இங்குள்ள மாரியம்மன் சிலைக்கு இரண்டு காலும், நான்கு கைகளுடனும் பார்ப்பதற்கு அமைதியான தோற்றத்துடன் சாந்தமாக இருப்பது போல் இருக்கும்.

ஆனால், பத்ரகாளி சிலை 2 கால்களுடனும், 8 கைகளுடனும், காலடியில் ஒரு அசுரனை மிதித்துக் கொண்டும், சிங்கப்பற்களுடனும் இருப்பதை பார்த்தால் கோபத்துடனும், தெற்கும்

③

அஞ்சாத மனங்கொண்டவள் போலவும், அகோரதாண்டவ மாடுவது போல் இருக்கும். பத்ரகாளி சிலையையும் அப்படியே உருவப்படமாக வரைந்து இத்துடன் அனுப்பியுள்ளேன் பாருங்கள்.

மாரியம்மன், பத்ரகாளி இரண்டுக்கும் ஒரே ஜாதி பூக்களை அணிவிக்கலாம். இரண்டு தெய்வங்களுக்கும் தனிப்பட்ட வெவ் வேறு பூக்கள் என்ற முறை இல்லை.


8 வது கேள்வி.

பதில்: மாரியம்மனுக்கு பூக்கள் அணிவிப்பது மற்ற தெய்வங்களுக் கெல்லாம் அணிவிக்கும் பூக்கள் எல்லாம் மாரியம்மனுக்கு அணிவிக் கலாம். அப்படி அணியப்படும் மலர்களில் வெள்ளை அரளி, சிகப்பு அரளி, காசரளி, சந்தன அரளி, கஸ்தூரி அரளி, குங்கும அரளி, பொன்னரளி, தங்கரளி இந்தப் பூக்கள் எல்லாம் சூடாக இருக்கு மென்று நினைக்கிறேன்.

மல்லிகைப்பூ, முல்லைப்பூ, இருவாட்சிப்பூ, ராமபாணம் பூ, ரோஜாப்பூ இவைகள் எல்லாம் குளிர்ச்சியாக இருக்கலாம். செவந்திப்பூ (சாமந்திப்பூ) சூடு, குளிர்ச்சி இரண்டுக்கும் சம்மந்தப்பட்டு இருக்கலாமென்று நான் நினைக்கிறேன்.

தெய்வத்திற்கு அணிவிக்கும் தழைகளில் நொச்சித்தழை, காசரளித் தழை, தங்கரளித்தழை இவைகள் எல்லாம் சூடாக இருக்கலாம். வில்வத்தழை, வன்னித்தழை இவைகள் குளிர்ச்சியாக இருக் கலாம்.

மலர்களை மாலையாகத் தொடுத்து மாரியம்மனுக்கு அணிவிக்கலாம்.



← இந்த முறையில்தான் எல்லா தெய்வங்களுக்கும் மாலை அணிவிக்கப்படும். மாலை தொடுக்காத உதிரிபூக் களை சாமிக்கு (தெய்வத்திற்கு) வைத்துபூஜை செய்வதாக இருந்தால் தெய்வத்தின் சிரசின் மேல் சிலபூக்களும், தெய்வத்தின் தோள்களின் மேல் சில பூக்களையும் வைத்து பூஜை செய்யலாம். மற்றபடி மாரியம்மனுக்கு உபயோகப் படுத்தப்படும் எல்லா ஜாதி பூக்களையும் பத்ரகாளிக்கும் உபயோகப் படுத்தலாம். பத்ரகாளிக்கு உபயோகப்படுத்தும் எல்லா ஜாதி பூக்களையும் மாரியம்மனுக்கும் உபயோகப் படுத்தலாம்.

12 வதுகேள்வி.

பதில்: இந்தக் கேள்வியால் நீங்கள் மொளப்பாலிகை என்பதைப் பற்றி கேட்டுள்ளீர்கள். இதை மாரியம்மன் திருவிழா காலங்களிலோ, திருவிழா இல்லாத காலங்களிலோ நவதானியங்கள் போட்டு மொளப்பாலிகை முளைக்க வைப்பதில்லை. நவதானியங்கள் போட்டு முளைக்க வைப்பது சிவன்கோவில் திருவிழாவில் தான் நடைபெறும் அதை திருவிழா முடிந்ததும் கொண்டுபோய் கிணற்றில் போட்டு

④

விடுவார்கள்.

14 வது கேள்வி.

பதில்: மாரியம்மன் சாமி எனக்கு வந்த பொழுது சில சமயம் என்னை குளிர வைக்கும், சில சமயம் சூடாக வைக்கும். ஆனால், எல்லா நிலையிலுமே அது குளிர்ச்சி, சூடு செய்கிறது என்று சொல்ல முடியாது. மேலே குறிப்பிட்டபடி மாரியம்மன் சில சமயம் என் மனதை குளிர்ச்சி படுத்துகிறாள் என்பதும் சில சமயம் என்னை சூடு படுத்துகிறாள் என் பதின் காரணம் என்னவென்றால் மாரியம்மன் சாமி என் உடலில் வந்து ஆவியுடன் கலக்கும் போது சில சமயம் அவள் கோபமாக இருப்பாள். அப்போது என்னுடைய மனது சூடாக இருப்பது போல் இருக்கும். சில சமயம் அவள் சந்தோஷமாக இருப்பாள் அப்போது என் மனது குளிர்ச்சியாக இருப்பது போல் இருக்கும்.

விழா முடிந்து கிணற்றில் நீர் செய்யும் பொழுது எல்லா நிலையிலுமே குளிர்ச்சி படுத்துகிறது. எப்படியென்றால் "மாரியம்மன் விழா சுகமாக முடிந்தது" என்று என் மனமும் மற்றும் அங்குள்ள எல்லோருடைய மனமும் குளிர்ச்சியாக இருக்கும். மற்றும் கிணற்றில் நீர் செய்யும் போது இரவு நேரமாக இருப்பதாலும், அக்காலம் இங்கு கோடை காலமாக இருப்பதாலும், குளிர்ந்த தண்ணீரில் குளிப்பதாலும் என் உடம்பு, கை கால்கள் எல்லாமே குளிர்ச்சியாகத்தான் இருக்கும்.

15 வது கேள்வி.

பதில்: — சில தெய்வங்களின் திருவிழா காலத்தில் மக்களுக்கு சாமி வந்தால் அவர்கள் தடியாலும், கத்தியாலும் தாங்களே அடித்துக்-கொள்கிறார்கள். இன்னும் சிலர் கத்தியால் தங்கள் உடம்பின் சில பாகங்களை கீறிக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் முள்வேலி மேல் விழுந்து உருளுகிறார்கள். இவைகளுக்கெல்லாம் சரியான பதில் கூற முடியாது. இதுபற்றி சிலரைக் கேட்டால் "அவர்கள் வேண்டுமென்றே சும்மாதான் அந்த மாதிரி அடித்துக் கொள்கிறார்கள்" என்று சொல்கிறார்கள். இன்னும் சிலர் அவர்களுக்கு சாமி வந்து விட்டதால், சாமிதான் அந்த மாதிரி அடித்துக் கொள்கிறது" என்று கூறுகிறார்கள்.

ஆனால், நான் நினைப்பது என்னவென்றால் மேற்கண்ட முறையில் நடப்பதெல்லாம் மனிதர்களால் ஏற்படுத்திக் கொள்ளும் பழக்கமென்றே நான் நினைக்கிறேன். அதுவும் உண்மையாக இருக்குமென்று நான் விரிவாகச் சொல்ல முடியாது. மக்கள் ஏன் அப்படி செய்து கொள்கிறார்கள் என்பது எனக்கே புரியவில்லை. அதைப் பற்றிய கதையும் எனக்கு ஒன்றும் தெரியாது.

19வது கேள்வி.

பதில்: குழந்தை பிறந்து அந்தக் குழந்தையின் தலை முடியை கொஞ்சநாள் கழித்து அவர்களின் குல தெய்வத்தின் கோயிலிலோ அல்லது அந்தக் குழந்தையின் பெயருள்ள சாமிக்கோ தலை முடியை மொட்டை யடிப்பார்கள். தலை முடியை மொட்டையடிப்பது அது தெய்வத்திற்கு அவர்கள் கொடுக்கு காணிக்கை யென்றே நினைக்கலாம். மற்றபடி அது ~~பிறந்த~~ குழந்தை பிறந்த தீட்டு கழிப்பதற்காக மொட்டையடிக்கப்படுகிறது என்று சொல்ல முடியாது. அப்படி இங்கு யாரும் சொல்வதுமில்லை.

தவிர, குழந்தைகளுக்கு மொட்டை யடிப்பதால் அக்குழந்தைக்கு உஷ்ணம் ஏற்படுமென்றோ, குளிர்ச்சி ஏற்படுமென்றோ சொல்ல முடியாது. ஆனால், குழந்தையின் மனம் கொஞ்சம் சூடாகத்தான் இருக்குமென்று நினைக்கிறேன். ஏன் என்றால் "தன்னுடைய மயிர்களையெல்லாம் எடுக்கிறார்களே" என்று குழந்தைகளுக்கு சிறிது கோபம் இருக்கும்.

20 வது கேள்வி.

பதில்: சில தெய்வங்களை குழியில் (மண்ணுக்குள்) போட்டு புதைப்பது என்னவென்றால் ஒரு தெய்வத்திற்கு உடம்பின் பகுதியில் (ஏதோ ஒரு பகுதியில்) சிறிது உடைந்து பழுது ஏற்பட்டால் அந்தத் தெய்வத்தை கோயிலிலிருந்து எடுத்து மண்ணுக்குள் போட்டு புதைத்து விடுவார்கள். அது எதற்கென்றால், ஒரு பழுதுபட்ட தெய்வத்தை மண்ணுக்குள் போட்டு புதைக்காமல் சும்மா பூமியின் மேல் போட்டிருந்தால் அத்தெய்வத்தின் மேல் மனிதர்களுடைய கால்கள் படலாம், சிலமனிதர்கள் அத்தெய்வத்தின் மேல் உட்காரவும் செய்வார்கள், மற்றும் நரகம் சம்மந்தப்பட்ட அசுத்தமான பொருள்கள் அதன் மேல் படலாம். இப்படிப் பட்ட கஷ்டங்கள் எல்லாம் அத்தெய்வத்திற்கு ஏற்படாமல் இருக்கவே மண்ணுக்குள் போட்டு புதைத்து விடுகிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

மேற்கண்டபடி ஒரு தெய்வத்தை பூமியின் உள்ளே போடாமல் பூமியின் மேலே போட்டு பலகஷ்டங்களுக்கு ஆளாக்கினால் அவ்வாறு செய்தவர்கள் பல பாவச் செயல்களுக்கு ஆளாவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

கேள்வி 26.

பதில்: இக்கேள்வியில் நீங்கள் குறிப்பிட்ட பூச்செடியின் பெயர் "தங்கரளிப்பூச் செடி" என்பது. இந்தச் செடியின் பூ மஞ்சள்

நிறமாகத்தான் இருக்கும். இந்தப் பூவை தெய்வங்கள் பூஜைக்கு எப்பொழுது வேண்டுமானாலும் உபயோகிக்கலாம். இன்ன நேரத்தில் தான் பூஜைக்கு உபயோகிக்க வேண்டுமென்று குறிப்பிட்ட நேரம் எதுவும் இல்லை. இந்தப்பூ சூடானது என்றே நான் நினைக்கிறேன். இந்தப் பூவை எல்லாத் தெய்வங்களுக்கும் பூஜைக்கு உபயோகப் படுத்தலாம். ஆனால், தெய்வங்களின் அர்ச்சனை செய்வதற்கு இந்தப் பூக்களையோ, மற்ற பூக்களையோ உபயோகப் படுத்த மாட்டார்கள். அதற்கு, பெண் தெய்வத்திற்கு வில்வத் தழையும், பெண் தெய்வத்திற்கு குங்குமமும் உபயோகிப்பார்கள்.

6வது கேள்வி.

பதில்:

திருமணச் சடங்குகளைப்பற்றி என்னால் அதிகமாக ஒன்றும் கூற முடியாது. பொதுவாக திருமண சடங்குகள் நடக்கும் போது பெண், மாப்பிள்ளை இருவருமே சூடாகத்தான் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஏன் என்றால், "சடங்குகள் சீக்கிரம் நடந்து முடிந்து நம் இருவரையும் சீக்கிரம் தனிமையில் விட்டால் நல்லது என்றும், தனிமையில் விட்டால் என்னவெல்லாமோ பேசிக் கொள்ளலாம் என்பதை இருவரும் முன்னமே யோசனை செய்து கொண்டு இருப்பதால் அவர்கள் இருவருக்கும் உள்ள உணர்ச்சியின் வேகத்தால் இருவருமே சூடாகத்தான் இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

24வது கேள்வி.

பதில் — சூனியத்திற்கும், பல்லுக்கும் சின்னத் தொடர்பு உண்டு அது என்னவென்றால் சூனிய வித்தை செய்யும் போது மந்திரம் சொல்ல வேண்டும். அந்த மந்திரம் சொல்வதற்கு மனிதனுடைய முன்பற்கள் (ராஜபற்கள்) இரண்டும் இல்லாவிட்டால் அந்த மனிதனால் மந்திரத்தை சரியாக உச்சரிக்க முடியாது. மந்திரத்தை சரியாக உச்சரிக்கா விட்டால் பில்லி, சூனியம் பலிக்காது.

பில்லி சூனியம் கற்ற ஒருவன் ஊருக்குள் வந்து ஏதாவது கெடுதல் செய்து கொண்டே இருந்தால், ஊர் மக்களுக்கு அது தெரிந்து அவனைப் பிடித்து அவனுடைய ராஜபற்கள் இரண்டையும் பிடுங்கி விடுவார்கள். பிறகு, அவன் பில்லி சூனியத்திற்கு மந்திரம் உச்சரிக்க முடியாது. பில்லி, சூனியமும் அவனுக்கு கட்டுப்படாது. அதனால் தான் பில்லி சூனியம் கற்றவனின் முன்பற்கள் இரண்டையும் பிடுங்குவதின் காரணம். மேலே கண்ட பதில்களை நானேதான் எழுதினேன். இது பற்றி இங்கு சில மக்களைக் கேட்டேன். அவர்களும் இதே பதில் தான் கொடுத்தார்கள்.

25வது கேள்வி.

பதில் — தெய்வத்திற்கு ஆடு பலியிட்டதும் அதனுடைய முன் கால்களில் ஏதோ ஒரு காலை அறுத்து அதன் வாயில் கவ்வக் கொடுக்கப்படுகிறது. ஆனால், அந்த ஆட்டின் முன் கால்களில் வலது கால், இடது கால் என்ற முறை கிடையாது. முன் கால் இரண்டில் ஏதோ ஒன்றை அறுத்து அதன் வாயில் கவ்வக் கொடுக்கலாம். மற்றபடி ஆட்டின் காலை அறுத்து ஏன் வாயில் கவ்வக் கொடுக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இதுபோல் எருமை, பன்றி இவைகளை தெய்வத்திற்கு பலியிட்டால், அவைகளின் காலை அறுத்து வாயில் கவ்வக் கொடுப்பதில்லை. இதன் காரணம் தெரியவில்லை.

27வது கேள்வி.

பதில் — கடவுளுக்கு படைக்கப்படும் பொருள்களையெல்லாம் மனிதர்களுக்கு கொடுக்கும் போது, அதை பிரசாதம் என்றே சொல்கிறார்கள். கடவுளுக்கு வைத்து பூஜை செய்த பொருள்களை மக்களுக்கு கொடுக்கும் போது, அதை கடவுளே கொடுக்கும் அருள் பிரசாதமாக நினைத்து மக்கள் அதை "பிரசாதம்" என்று சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். தவிர, "கடவுளுக்கு படைக்கப்படும் பொருள்களை ஏன் பிரசாதம் என்று சொல்கிறார்கள்?" என்று சில மக்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் "கடவுளுக்குப் படைக்கப்படுவதை எல்லாம் பிரசாதம் என்றுதான் சொல்வார்கள். ஆனால், அதற்கு பிரசாதம் என்ற பெயர் எப்படி வந்தது என்று தெரியவில்லை" என்றே பதில் கொடுக்கிறார்கள்.

கடவுளின் பிரசாதத்தை கடவுளின் ~~[illegible]~~ சலை வாயில் பட்டு வருகிறது என்று யாரும் சொல்வதில்லை.

கடவுளின் பிரசாதத்தை எல்லா ஜாதி மக்களுக்கும் கொடுக்கப்படும்.

~~கடவுளின் பிரசாதத்தை~~
எல்லா ஜாதி மக்களும் கடவுளின் பிரசாதத்தை சாப்பிட முடியும். இது ஏன் என்றால், கடவுள் என்பவர் குறிப்பாக ஒருசில ஜாதிகளுக்குமட்டும் கடவுளாக இல்லை. எல்லா ஜாதிக்கும் ஏற்பட்டவர் கடவுள். அவர் பொதுவானவர். ஆகையால், அவருடைய பிரசாதத்தை எல்லோரும் சாப்பிட முடியும்.

மற்றபடி கடவுளின் பிரசாதத்தை மாதாரிகள் சாப்பிடக்கூடாது, பறையர்கள் சாப்பிடக்கூடாது என்று சொல்வார்களாயின், அது மனிதரால் ஏற்படுத்திக் கொண்டும் பழக்கமே தவிர, சாப்பிடக்கூடாது என்ற நிபந்தனை எதுவும் இருக்காது என்று நான் நினைக்கிறேன். மற்றபடி அவர்கள் வைக்கும் பொங்கல் சாதத்தையோ, மற்ற பொருள்களையோ கடவுளுக்கு வைத்து பூஜை செய்யக்கூடாது என்ற முறையும் மனிதனால் ஏற்படுத்திக் கொண்ட முறைதான் என்றே நான் நினைக்கிறேன்.

பிராமணர், பண்டாரம் இவர்கள் தொட்ட உணவுகளை கடவுள் ஏன் சாப்பிடுகிறார் என்றால், கடவுளுக்கு பூஜை செய்வதற்கும், அடிமை செய்வதற்கும் ஏற்பட்டவர்கள் மேற்சொன்ன இரண்டு ஜாதியுந்தான். ஆகையால், அவர்கள் தொட்ட உணவை கடவுள் சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும். அவர்கள் தொடாத உணவை எப்படி கடவுள் சாப்பிட முடியும்?

ஆனாலும், மேற்கண்ட இரண்டு ஜாதிகள் தொட்ட உணவுகளை மட்டும், கடவுள் சாப்பிடுகிறார், மற்ற ஜாதியினர் தொட்ட உணவுகளை கடவுள் சாப்பிடமாட்டார் என்ற முறை இருக்காது என்று நான் நினைக்கிறேன். இவைகள் எல்லாம் முன்கால மக்களால் ஏற்படுத்திய பழக்கமாகத்தான் இருக்குமென்று நான் நினைக்கிறேன்.

தவிர, கடவுளுக்கு படைத்த உணவுகளை மக்கள் சாப்பிடுவது அது அவருடைய அருள் பிரசாதம் என்று நினைத்தே மக்கள் சாப்பிடுகிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

3வது கேள்வி.

பதில்: தெய்வங்களுக்கு விழாக்காலங்களில் நல்ல அழகான துணிகள் உடுத்தி அலங்காரம் செய்வார்கள்.

ஆண் தெய்வத்திற்கு வெள்ளை வேஷ்டி, மஞ்சள் வேஷ்டி, பட்டு வேஷ்டி இவைகள் எல்லாம் உடுத்து அலங்காரம் செய்வார்கள்.

பெண்தெய்வத்திற்கு கலர் பட்டுத்துணிகள், சிகப்பு பட்டுத்துணிகள், மஞ்சள் பட்டுத்துணிகள், ரோஸ் கலர் பட்டுத்துணிகள், இவைகளில் சில்க் துணிகள், சீட்டித்துணிகள் இவைகள் எல்லாம் உடுத்தி அலங்காரம் செய்வார்கள். இதை தவிர, குறிப்பிட்ட கலர் துணிகள் என்பது தெய்வங்களுக்கு கிடையாது.

ஆனால், நவக்கிரகங்கள் 9க்கும் ஒன்பது வகையான குறிப்பிட்ட கலர் துணி அணிவதுண்டு. அது:

1. சூரியனுக்கு சிகப்பு நிறத் துணி
2. சந்திரனுக்கு வெளுத்த சிகப்பு நிறத்துணி
3. செவ்வாயிக்கு அத்தமான சிகப்பு நிறம் துணி
4. புதனுக்கு நீல நிறத் துணி
5. குருவுக்கு வாடாமல்லிக்கலர் துணி
6. சுக்ரனுக்கு காவி நிறத் துணி
7. சனீஸ்வரனுக்கு நீலக்கருப்பு நிறத்துணி
8. ராகுவுக்கு .. மஞ்சள் நிறத்துணி
9. கேதுவுக்கு பச்சை நிறத்துணி

மேற்கண்டபடி 9 நவக்கிரகங்களுக்கும் குறிப்பிட்ட நிறத்துணிகள் அணியப்படும். மற்றபடி மாரியம்மனுக்கு சிகப்பு நிறத்துணியும், பார்வதிக்கு பச்சை நிறத்துணியும் அணிய வேண்டுமென்ற முறை கிடையாது. சொல்லவும் முடியாது.

மற்றபடி மிருகங்களை தெய்வங்களுக்கு ஏன் பலியிடுகிறார்கள்? என்பதை குறிப்பாக சொல்ல முடியாது.

உதாரணமாக இப்பொழுது பலிவாங்கும் தெய்வங்கள் எல்லாம் அக்காலத்தில் இரத்த வெறி பிடித்து அலைந்திருக்கலாம். மிருகங்களையும், மனிதர்களையும் அவைகள் பலிவாங்கிக் கொண்டிருந்திருக்கலாம். அதை ஒரு பழக்கமாக வைத்துக் கொண்டு இப்போதும் அவ்வாறு அந்தத் தெய்வங்களுக்கு பலியிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். பலியிடும் மிருகங்களில் ஒவ்வொரு தெய்வத்திற்கும்

குறிப்பிட்ட கலர் உள்ள மிருகங்களைத்தான் பலியிட வேண்டுமென்ற முறை கிடையாது. எந்த நிறமுள்ள மிருகங்களையும் பலியிடலாம்.

மாரியம்மனுக்கும் குறிப்பிட்ட கலர் மிருகந்தான் பலியிடவேண்டுமென்பது கிடையாது எந்த நிறமுள்ளதாக இருந்தாலும் பலியிடலாம்.

மிருகங்கள் பலியிடாத தெய்வங்களுக்கு பொங்கல் சாதம், சர்க்கரைப்-பொங்கல், தேங்காய்பழம், வடை, பாயாசம், பால், தயிர், சுண்டல் வகைகள் இவைகள் எல்லாம் படைத்து பூஜை செய்வார்கள்.

பழவகைகளில் ஆரஞ்சு, திராட்சை, பலா, மாம்பழம், வாழைப்பழம் ஆகிய வைகளை படைப்பார்கள். இவைகள் எல்லாம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறமுடையவைகள். ஆனால், மேற்கண்ட பொருள்களில் சுத்தமான சிகப்பு நிறமுள்ள பொருள்கள் ஒன்றுமில்லை. அதுபோல் மாரியம்மனுக்கும் சிகப்பு நிறமுள்ள பொருள்கள் எதுவும் நான் படைத்து பூஜை செய்யவில்லை.

மாரியம்மனுக்கும் மற்ற தெய்வங்களுக்கும் சிகப்பு நிறமுள்ள குங்கும் பொட்டு வைப்பார்கள். அதுபோல் சிகப்பு நிறப்பூக்கள், துணிகள் இவைகள் எல்லாம் அணியலாம்.

9வது கேள்வி.

பதில்: விநாயகரை தெய்வங்களுக்கெல்லாம் பெரியவராக கருதப்படுகிறது. இவர் மனிதர்களுக்கு ஏற்படும் தீராத கிரகங்களையும், விக்னங்களையும் தீர்க்கக் கூடியவர் என்று மக்கள் நம்புகிறார்கள். அதனால்தான் இவருக்கு விக்னேஷ்வரன் என்ற பெயர் வந்திருக்கலாம். இவர் சாப்பாடு வகைகள், பலகாரங்கள், சுண்டல்கள், பழங்கள் இவைகள் எல்லாம் சாப்பிடுவதற்கு ஆர்வமுள்ளவர். அதிகமாகவும் சாப்பிடக் கூடியவர் என்று நான் நினைக்கிறேன். ஏன் என்றால், விநாயகருக்கு மற்ற எல்லாத் தெய்வங்களையும் விட வயிறு பெரிதாக இருக்கிறது. அதனால்தான் அப்படி நினைத்தேன். கிரகங்கள் எல்லாம் மற்ற எல்லாத்தெய்வங்களையும் பிடித்து அவர்களிடம் கிரகங்கள் ஆட்சி செய்யமுடியும். ஆனால், விநாயகரிடம் கிரகங்கள் எவையும் அண்ட முடியாது என்று சொல்கிறார்கள். இதுபற்றி நான் சிறிய கதை ஒன்று கேள்விப்பட்டுள்ளேன். அது:

முன்னொரு காலத்தில் 9 கிரகங்களில் ஒருவரான சனீஷ்வரன் விநாயகரிடம் வந்து "விநாயகரே! நான் எல்லாத் தெய்வங்களை $7\frac{1}{2}$ வருடம் பிடித்து என்னிஷ்டப்படி ஆட்சி புரிந்துவிட்டேன். கடைசியாக உங்களிடம் வந்தேன் உங்களையும் பிடித்து நான் $7\frac{1}{2}$ வருடம் ஆட்சி புரிய வேண்டும்" மென்றானாம். அதற்கு விநாயகர் சனீஷ்வரனை நோக்கி "சனீஷ்வரா!

நீ என்னிடம் ஆட்சி புரிய வந்ததற்கு நான் சந்தோஷப் படுகிறேன். ஆனால், இன்று எனக்கு பல வேலைகள் இருக்கிறது. ஆகையால், நீ இன்றுபோய் நாளைக்கு வா" என்று சொன்னாராம். அதற்கு சனீஷ்வரன் விநாயகரை நோக்கி "சரி, நீங்கள் என்னை நாளைக்கு வரச் சொன்னதாக ஒரு குறிப்பு வேண்டு"மென்றாராம். அதற்கு, விநாயகர் "சரி, இன்றுபோய் நாளைக்கு வா என்று நான் சொன்னதை என்னுடைய முதுகில் எழுதிவிட்டுப்போ" என்று தன்னுடைய முதுகைத் திருப்பிக் காட்டினாராம். உடனே சனீஷ்வரன் விநாயகர் முதுகில் இன்றுபோய் நாளைக்கு வா என்று எழுதி விட்டு சென்று ~~விட்~~ விட்டாராம். மறுநாள் காலையில் மறுபடியும் விநாயகரிடம் வந்தாராம் சனீஷ்வரன். சனீஷ்வரன் வந்ததும் தன்னுடைய முதுகை திருப்பிக்காட்டினாராம். அதில் இன்றுபோய் நாளைக்கு வா என்று எழுதியிருந்ததைப் பார்த்து விட்டு திரும்பிச் சென்று விட்டாராம். இப்படியே தினமும் வந்து பார்க்கும் போதெல்லாம் விநாயகர் தன்னுடைய முதுகை திருப்பிக் காட்டுவதும், சனீஷ்வரன் அதைப்பார்த்து விட்டு திரும்பிச் செல்வதுமாகவே இருக்கிறாராம். சனீஷ்வரனிடம் விநாயகர் இப்படி தந்திரமாக தப்பிக் கொண்டதை பார்க்கும்போது விநாயகர் ஒரு பெரிய தந்திரகாரர் என்று தெரிகிறது. ~~இன்று~~ அன்று முதல் இன்றுவரை இன்னும் சனீஷ்வரனுக்கு ~~விநா~~ விநாயகர் கட்டுப்படவில்லையென்று சொல்கிறார்கள்.


மேலும், விநாயகர் தன் கையில் தன்னுடைய முகத்தில் (யானைமுகத்தில்) உள்ள கொம்பு ஒன்றை ஒடித்து வைத்துக் கொண்டு இருக்கிறார்.

அதுபற்றி ஒரு கதை கேள்விப்பட்டுள்ளேன். அது: முன்காலத்தில் பாண்டவர்களுக்கும், துரியோதனாதிகளுக்கும் நடந்த பாரதப் - போரில் ஒவ்வொருதரப்பிலும் எத்தனை பெயர் இறந்துபோகிறார்கள், யார், யார் போர் புரிகிறார்கள் என்பதை விநாயகர் கணக்கெடுத்தாராம். அப்பொழுது எழுதுகோல்கள் எல்லாம் தீர்ந்துபோய் விட்டதாம். எழுதுவதற்கு எழுதுகோல் இல்லாமல் உடனே தன்னுடைய முகத்தில் இருந்த கொம்புகளில் ஒன்றை ஒடித்து அதைக் கொண்டு எழுதினாராம். இந்தக் கணக்கு எழுதும்போது அவர் இமயகிரி (இமயமலை) மேல் இருந்து எழுதியதாகச் சொல்கிறார்கள். பாரதப்போரின் கணக்கை விநாயகரைத் தவிர வேறு எந்தத் தெய்வமும் எடுக்க முடியாது என்றும் சொல்கிறார்கள்.

மேலும், விநாயகர் பற்றி இன்னொரு கதை கேள்விப்பட்டுள்ளேன். விநாயகர் கல்யாணம் செய்து கொள்வதற்காக தன்னுடைய தாய் பார்வதியைப் போல் உருவமுள்ள பெண்தான் வேண்டுமென்று கேட்டாராம். அதைக் கேட்ட ஈஸ்வரனும், பார்வதியும் யோசித்து "ஒவ்வொரு ஊரிலும் ஊருக்குப் பொதுவான கிணறு இருக்கும் இடத்தில் நீ போய் இருந்து கொள். அங்கு கிணற்றுக்கு தண்ணீர் எடுக்க வரும் பெண்கள் யாராவது என்னைப் போல் (பார்வதியைப் போல்) உருவமுள்ளவர்கள் வந்தால் கல்யாணம் செய்து கொள்" என்றார்களாம். அதனால் தான் ஒவ்வொரு ஊரிலும் அவ்வூருக்கு பொதுவாக உள்ள ஊர்க்கிணற்றங்கரையில் விநாயகர் வைக்கப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். தன்னுடைய தாயான பார்வதியைப்போல பெண் விநாயகருக்கு இன்னும் கிடைக்காமல் தான் கல்யாணமாகவில்லையென்று சொல்கிறார்கள்.

தவிர, இவருக்கு குறிப்பிட்ட கொடி ஒன்றுமில்லை.
இவருக்கு வெள்ளை வேஷ்டி, மஞ்சள் வேஷ்டி இவைகள் எல்லாம் உடுத்துவார்கள். மலர்கள் மற்ற தெய்வங்களுக்கு உபயோகிப்பது போல் எல்லா ஜாதி மலர்களையும் உபயோகிக்கலாம்.

விநாயகருக்கு பிறப்பு உறுப்பு இல்லை.
விநாயகர் சிலையை பிறப்பு உறுப்புடன் செதுக்குவதில்லை.
சிவலிங்கம் பார்வதி, ஈஸ்வரன் இவர்களுடைய பிறப்பு உறுப்புகள் என்று சுந்தரக் குருக்கள் அவர்கள் சொல்கிறார்கள். நானும் அப்படித்தான் நினைக்கிறேன்.




சிவலிங்கத்திற்கும் நிறத்திற்கும் அதிகமான சம்மந்தம் கிடையாது. சிவலிங்கம் முக்கியமாக கருங்கல்லில் செதுக்கப்படுகிறது. தவிர, அதற்கு கோவில்களில் எண்ணெய் தேய்த்து பூஜை செய்கிறார்கள். அதனால் கறுப்பு நிறமாக இருக்கும்.
மற்றபடி சிவலிங்கத்திற்கு வெள்ளை வேஷ்டி, மஞ்சள் வேஷ்டி, காவிக் கலர் வேஷ்டி, பட்டு வேஷ்டி இவைகள் எல்லாம் அணிவார்கள்.
தவிர, மற்ற தெய்வங்களுக்கு அணிவிக்கும் எல்லா ஜாதி மலர்களையும்

சிவலிங்கத்திற்கு அணிவித்து பூஜை செய்யலாம். முக்கியமாக சிவலிங்கத்திற்கு வில்வத்தை உபயோகித்து பூஜை செய்வார்கள். மற்றபடி பார்வதியின் யோனி பற்றி எனக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது.

பார்வதியின் மூலஸ்தான சிலையை நான் படம் வரைய முடியாது. காரணம் பார்வதி இருக்கும் மண்டபத்துக்குப் பக்கம் ஐயர் என்னை விடமாட்டார். தேரில் பிரயாணம் செய்யும் பார்வதி சிலையை வேண்டுமானால் நான் படம் வரைந்து அனுப்ப முடியும். மற்றபடி மாரியம்மன், பத்ரகாளி இவைகள் இரண்டும் பார்வதியின் அவதாரமென்றே நான் நினைக்கிறேன். தவிர, பத்ரகாளி, மாரியம்மன் இரண்டும் துஷ்ட தேவதைகள் என்று சொல்கிறார்கள். ஆனால், ஈஸ்வரியானவள் உலகத்திற்கே ஒரு தாயானவள் என்றும், பொறுமையானவள் என்றும் சொல்கிறார்கள். மற்றபடி மாரியம்மன், பத்ரகாளி இரண்டு கோவில்களிலும் ஆடுகள், கோழிகள் ஆகியவைகள் பலியிடப்படுகின்றன. ஆனால், பார்வதி கோவிலில் அந்த மாதிரி ஒன்றும் பலியிடமாட்டார்கள். இது தவிர வேறு வித்தியாசங்கள் அதிகம் இருக்காது.

6வது கேள்வி.

பதில்: சாந்திக் கல்யாணம் என்பது கல்யாணம் முடிந்த பிறகு மணமகன், மணமகள் இருவரையும் தனி வீட்டுக்குள் (விருந்து வீட்டுக்குள்) விடும்போது செய்யும் சீர்தான் சாந்திக் கல்யாணம் என்பது. இந்த சீர் சில ஜாதிகள் மட்டும் செய்வார்கள் போல் தெரிகிறது. இதுபற்றிய விபரத்தையும், சீர் செய்யும் முறை பற்றியும் மறுபடி உங்களுக்கு எழுதி அனுப்புவேன்.

மேற்கண்ட சீரின்போது மணமகனும், மணமகளும் இளிச்சி யாகவே இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

கிராம சாந்தி பற்றிய விபரம் ஏற்கனவே (முன்பு) உங்களுக்கு எழுதி அனுப்பியுள்ளேன் என்று நினைக்கிறேன். இந்த சீர் பத்ரகாளியம்மனுக்கு தேர் ஓட்டும் நாளன்று செய்யப்படுகிறது. பத்ரகாளியம்மன் ஒரு கிராமத்திற்குண்டான கிராம தேவதை. இவள் பில்லி, சூனியம், பேய், கிரகம் இவைகளையெல்லாம் மக்களிடம் வராமல் தடுத்து நிறுத்தி மக்களைக் காப்பாற்றும் தெய்வம் என்று சொல்கிறார்கள். ஆகையால், அவளுக்கு தேர் ஓட்டும் நாள் அன்று கிராம சாந்தி என்ற சீர் செய்வதால் கிராமத்தில் உள்ள பீடை, பிணி, பில்லி, சூனியம் இவைகளையெல்லாம் நீங்குவதற்காக இருக்குமென்று நான் நினைக்கிறேன். இதனால், கிராமம்

குளிர்ச்சியாகுமென்றோ சூடு ஆகுமென்றோ நிச்சயமாகச் சொல்ல முடியாது. உதாரணமாக இந்தச் சீர் செய்வதால் இராமம் குளிர்ச்சி அடையுமென்று நாம் நினைக்கலாம்.

இறந்துபோனவருடைய உடம்பு குளிர்ச்சியாகத்தான் இருக்குமென்று ஜனங்கள் சொல்கிறார்கள். நானும் அப்படியே நினைக்கிறேன். ஒரு மனிதன் இறந்துபோனபின் அவனுக்கு செய்யும் சடங்குகள் எல்லாம் பழக்கங்களால் ஏற்பட்டது என்றே நான் நினைக்கிறேன். அந்த சடங்குகளால் இறந்துபோனவன் உடம்பு குளிர்ச்சிதான் அடையும். ஏன் என்றால் அந்த சடங்குகளுக்கு உபயோகிக்கும் சாமானங்கள் எல்லாம் முக்கியமாக குளிர்ச்சியான சாமானங்களே உபயோகப்படுத்தப் படுகின்றன. அதனால், இறந்து போனவருடைய உடம்பு குளிர்ச்சியடையுமென்றே நினைக்கிறேன்.

10 வது கேள்வி.

பதில்: தீட்டுகள் உஷ்ணத்துக்கு சம்மந்தப்பட்டது என்று சொல்ல முடியாது. ஆனால், தீட்டை நீக்குவதற்கு தலையில் கொஞ்சம் நெய்யும், அரப்பும் தேய்த்து குளிக்கிறார்கள். நெய், அரப்பு இரண்டுமே குளிர்ச்சியான பொருள்கள்தான். ஆகையால், தீட்டு நீக்குவதற்காக உபயோகிக்கும் மேற்கண்ட இரண்டு பொருள்களையும் சம்மந்தப்படுத்திப் பார்த்தால் தீட்டுகள் உஷ்ணமானதாக இருக்கலாமா? என்று நினைக்கத் தோன்றுகிறது.

மற்றபடி இறப்புத்தீட்டு, வயதுக்கு வந்த தீட்டு, மாதமாதம் வீட்டுக்குத் தூரமாகும் தீட்டு, குழந்தை பிறந்த தீட்டு இவைகளுக்கெல்லாம் சடங்கு செய்யும் பொருள்களால் அந்த தீட்டுகளை குளிர்ச்சி படுத்துவதற்கு என்று யாரும் சொல்லமாட்டார்கள். தீட்டை கழிப்பதற்குத்தான் சடங்கு செய்கிறார்கள் என்று சொல்வார்கள்.

16 வது கேள்வி.

பதில்:— கோவில்களில் தேங்காயை உடைத்து அதற்கு மஞ்சள் துடைக்கும் பழக்கம் இல்லை. அது கல்யாணத்தின்போது முகூர்த்தம் நடக்கும் முன்பாக மாங்கல்ய பூஜை செய்வதற்கு உடைக்கும் தேங்காய் மூடிகள் இரண்டிலும் மஞ்சள் துடைத்து வைத்து பூஜை செய்வார்கள். இதுபற்றி நான் நினைப்பது என்னவென்றால் மஞ்சள் முக்கியமாக பெண்மைக்கே உரியது. கல்யாணம் செய்து கொண்டு தம்பதிகள் நீண்டநாட்களுக்கு மஞ்சள், குங்குமம் அழியாமல் சுகமாக வாழவேண்டுமென்பதற்காக இருக்கலாம்.

ஒரு பெண் தன்னுடைய புருஷன் இறந்துபோனபின் மஞ்சள்,

இவ்விரண்டையும் உபயோகிக்க முடியாது. உலக மாதாவான பார்வதிக்கு ஏற்பட்டதும் மஞ்சள், இவ்விதந்தான். இதையெல்லாம் உதாரணமாக வைத்துத்தான் மாங்கல்ய பூஜை செய்யும் தேங்காய் மூடிகளுக்கு மஞ்சளை தடவுகிறார்களோ என்னவோ தெரியவில்லை.

பெண்கள் தங்களுடைய உடம்புக்கு மஞ்சளைத் தேய்த்து குளிப்பதால் அது அவர்கள் உடம்பையும் குளிர்ச்சிதான் ஏற்படுத்துகிறது.

பெண்கள் மஞ்சளைத் தேய்த்து குளிப்பதின் அவசியம் மஞ்சள் பெண்மைக்கு உரியதாக இருப்பதாலும், மஞ்சள் அவர்களை பலவகையில் அழகுபடுத்துவதாலும் நினைத்து மஞ்சள் தெய்த்து குளிக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

13 வது கேள்வி


பதில்:— பல வருஷங்கள் இங்கு மழை பெய்யாமலிருந்தால் எந்த தெய்வத்திற்கும் யாகம் வளர்த்து வருவதில்லை, இங்கு பலவருடம் மழை பெய்யவில்லையென்றால் ஊர்க்காரர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து எல்லோரிடமும் பணம் வசூல் செய்து அங்குள்ள முக்கிய தெய்வங்களுக்கு அபிஷேகமும், அழகு படைத்து பூஜையும் செய்வார்கள்.

மற்றும் ஊரில் உள்ள பெண்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து மழைச்சோறு எடுப்பார்கள். அது: பெண்கள் எல்லாம் சேர்ந்து ஒரு கூடையில் அகப்பை, துடுப்பு, சிவக்கட்டை மூன்றையும் போட்டு எடுத்துக்கொண்டு, ஒரு சிறிய பலகையில் மாட்டின் சாணியால் பிள்ளையார் போல் வைத்து அந்த சாணியின் மேல் எருக்கலை செடியின் பூக்களை நிறைய குத்தி அதை ஒரு பெண் ஏந்திக் கொள்வாள். மறுபடி ஒரு பெண் ஒரு மண் குடத்தை எடுத்துக் கொள்வாள். இவர்கள் எல்லாம் ஊரில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று அவர்கள் கொண்டு போகும் சாணிப்பிள்ளையாரை வாசலில் வைத்து அதைச் சுற்றிலும் பெண்கள் நின்று பாட்டுப் பாடிக் கொண்டு கும்மி அடிப்பார்கள். அப்போது அந்த வீட்டில் உள்ளவர்கள் இவர்கள் வைத்திருக்கும் மண் குடத்தில் கொஞ்சம் சோறு கொண்டு வந்து போடுவார்கள். இப்படியே வீடுவிடாமல் சென்று பாட்டுப் பாடி, கும்மியடித்து சோறு வாங்கி வருவார்கள். கடைசியில் அந்த சோற்றை பிள்ளையார் கோவிலில் கொண்டு போய் வைத்து

எல்லாப் பெண்களும் சாப்பிடுவார்கள். பிறகு பிள்ளையார் கோவிலில் சிறிது நேரம் பாட்டுப்பாடிக் கொண்டு கும்மியடிப்பார்கள். பிறகு அந்தப் பெண்கள் சிலர் அவர்கள் கொண்டுவந்த சாணிப்பிள்ளையார், அகப்பை, திருப்பு(?), சீவக்கட்டை இவைகளை யெல்லாம் எடுத்துக் கொண்டு "இங்கு மழையே பெய்யவில்லை நாங்கள் எங்காவது போகிறோம்" என்று சொல்லி அழுது கொண்டே அந்த ஊர் ~~எல்லை~~ சுடுகாடு தாண்டிப்போய் அந்த இடத்தில் அவர்கள் கொண்டு போன சாமான்களையெல்லாம் போட்டு விட்டு எல்லோரும் சுற்றி வட்டமாக நின்று கட்டிய(?)ழுவார்களாம். அப்போது அந்த ஊரில் உள்ள வயதான பெண்கள் சிலர் சென்று "நீங்கள் எங்கும் போகவேண்டாம் இனிமேல் நம்ம ஊருக்கு மழை பெய்யும் வாருங்கள்" என்று சொல்லி அவர்களுடைய கோபத்தை நீக்கி ஊருக்கு கூட்டி வருவார்களாம்.

குறிப்பு: முன் காலத்தில் மேற்கண்டபடி சீர் செய்தால் உடனே மழை பெய்யும் என்று பெரியோர்கள் சிலர் சொல்கிறார்கள். இக்காலத்தில் அப்படியாரும் செய்வதில்லை மழையும் பெய்வதில்லை.

அதற்கு உபயோகித்த சாணிப்பிள்ளையார் →




இதை உக்கை என்று சொல்வார்கள்.

மேற்கண்ட முறையில் இரவர்(?) ஜாதிப் பெண்களும் சீர் செய்வார்கள். சக்கிலியர் ஜாதிப் பெண்களும் செய்வார்கள். ஆனால், இவர்கள் சோறு வாங்குவதுடன் தானியங்களும் வாங்குவார்கள்.

போனவாரத்தில் சில சக்கிலியப் பெண்கள் சேர்ந்து சேலப்பாளையத்தில் வந்து மழைச்சோறு எடுத்தார்கள். ஆனால், மழைபெய்யவில்லை.

மழைச்சோறு எடுக்கும் போது உக்கையை ஒவ்வொரு வீட்டிலும் நடுவாசலில் வைத்து அவர்கள் கும்மியடிக்கும் போது பாடும் பாட்டு சில வரிகள் கீழே எழுதியுள்ளேன் பாருங்கள்.

பாடல்:

இடியிடிக்கோ மழை பொழியோ
இருகரையும் பெருகி வரோ
பெருகி வந்த தண்ணியிலே
பெண்கள் எல்லாம் நீராடி
நீராடி துயிலுடுத்தி


நீலவர்ணப் பட்டுடுத்தி
பட்டல்லவா சொன்னத் தண்ணியிலே
?

மேற்கண்ட பாட்டுகள் சில வரிகளே தெரிந்தது. அதற்குமேல் வரும் வரிகள் தெரியவில்லை.

மேகம், ~~இந்த மாதத்தில்~~

இங்கு மழையே பெய்யவில்லை என்ற காரணத்தால், ஆலம்பாளையம் மாகாளியம்மன் கிழபுறத்துக் கட்சிக்காரர்கள் எல்லாம் இந்த மாதத்தில் ஆலம்பாளையம் பிள்ளையார் கோவில், மாகாளியம்மன் கோவில், கரட்டுக் குமார் கோவில் ஆகிய தெய்வங்களுக்கு அபிஷேகம் செய்ய யோசித்துள்ளார்கள். அது எப்போது (எந்த நாளில்) செய்வார்கள் என்று நிச்சயமாகத் தெரியவில்லை. அப்படி அவர்கள் அபிஷேகம் செய்தால் எப்போது செய்தார்கள் என்பதையும், அதனால் மழை பெய்ததா என்பதையும் நான் உங்களுக்கு மறுபடி எழுதுவேன்.

உவதுகேள்வி.

பதில்: தெய்வங்களில் சிவன், பார்வதி, முருகன், பெருமாள், பத்ரகாளி, அங்காளம்மன், மாரியம்மன் இத்தெய்வங்களுக்கெல்லாம் விசேஷ காலங்களில் கொடி கட்டப்படும். அக்கொடிகள்  ← இந்த வடிவத்தில் தான் கட்டப்படும். ஆனால், அதில் அமைக்கும் சின்னங்கள் ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனிப்பட்டதாகும்.

அது: சிவன், பார்வதி, அங்காளம்மன் ஆகிய தெய்வங்களுக்கு ரிஷபவாகனத்தை (நந்தி) கொடித்துணியில் வரைந்து கட்டுவார்கள். பத்ரகாளி, மாரியம்மன் மற்றும் செல்லாண்டியம்மன் (செல்வியம்மன்) இவைகளுக்கெல்லாம் கொடித்துணியில் சிங்கவாகனத்தின் உருவத்தை வரைந்து கட்டுவார்கள். பெருமாளுக்கு (விஷ்ணுவுக்கு) கருடன் வாகனத்தை கொடித்துணியில் வரைந்து கட்டுவார்கள். முருகனுக்கு மயில் வாகனத்தை கொடித்துணியில் வரைந்து கட்டுவார்கள்.

~~இந்தக் கொடிகள் புதிய வெள்ளைத் துணியில்~~ காவிக்கல் என்ற ~~ஒருவகை நிறக்கல்லை~~ அரைத்து, பிறகு, ~~துணியில் அந்தத் தெய்வத்திற்கு கொடிக்கட்டுகிறார்களோ அந்தத் தெய்வத்தின் வாகனச் சின்னத்தை காவியின்~~ காவியால் ~~துணியில்~~

கொடித்துணியில் தெய்வங்களின் சின்னத்தை வரைவதற்கு காவிக்கல் என்ற ஒருவித நிறக்கல்லை அரைத்து உபயோகிப்பார்கள்.

கொடிக்கட்டும் துணிகள் எல்லாம் எல்லாத் தெய்வத்திற்குமே புதிய வெள்ளைத்துணிகள் தான் உபயோகிக்கிறார்கள். வேறு நிறமுள்ள துணிகள் எந்தத் தெய்வங்களும் இல்லை.

கொடிக்கட்டுவதின் அவசியம் என்னவென்றால், மக்கள் அதைப்பார்த்து அந்தத் தெய்வத்திற்கு திருவிழா நடக்கிறது என்றுதெரிந்து கொள்வார்கள். மேலும் அக்கொடிகளின் சின்னத்தைப்பார்த்து எந்தத் தெய்வத்திற்கு திருவிழா நடக்கிறது என்பதையும் தெரிந்து கொள்வார்கள்.

மற்றபடி, தெய்வங்களுக்கு கட்டும் கொடியில் குஞ்சம் (Tassels) எதுவும் இல்லை.

~~அதே போல்~~ இதுபோல் மனிதர்களில் எந்த ஜாதிக்கும் கொடிகள் இல்லை.


17 வது கேள்வி.

பதில்: கோவில் சுவர்களில் வெள்ளை நிறமும், சிகப்பு நிறமும் பட்டைகள் அடித்திருப்பது: அதை மக்கள் கண்களில் பட்டதும் அதை நேராக தெய்வத்தின் ஆலயம் (கோயில்) என்று தெரிந்து கொள்வதற்காகத்தான் என்று சொல்கிறார்கள்.


மேலும், அந்த நிறங்களில் வெள்ளை நிறம் ஆண் தெய்வத்தையும், சிகப்பு நிறம் பெண் தெய்வத்தையும் குறிக்கிறது என்று சுந்தரக் குருக்கள் அவர்கள் சொல்கிறார்கள்.

22 வது கேள்வி.

பதில்: சிவனுக்கு வலதுபுறம் பார்வதி இருக்கும்





இப்படி இருக்கும் கோவில்கள் எல்லாம் சோழராஜன் கட்டிய கோயில்கள் என்றும், சிவனுக்கு இடதுபுறம் பார்வதி இருக்கும்




இப்படியிருக்கும் கோயில்கள் எல்லாம் பாண்டிய ராஜன் கட்டிய கோயில்கள் என்றும் சுந்தரக் குருக்கள் அவர்கள் சொல்கிறார்கள்.

மேற்கண்ட முறையில் சிவன் பார்வதி இருக்கும் கோயில்களில் விழாக்காலங்களிலும் அப்படியே அவைகள் இருக்கும் முறையில் தான் வைக்கப்படும் இடம், வலம் என்ற முறையில் மாற்றி வைக்கப் படமாட்டாது.

மற்றும், திருமண காலங்களில் இங்குள்ள எல்லா ஜாதியாரும் அதாவது பிராமணர் முதல் சக்கிலியர் வரை மாப்பிள்ளைக்கு வலதுபுறந்தான் பெண் நிற்பாள் (நிறுத்துவார்கள்)




← இந்த முறையில் தான் எல்லா ஜாதியாருமே நிறுத்துவார்கள்.

23 வது கேள்வி.

பதில்: ஆண்கள் வேஷ்டி கட்டுவது பற்றிய முறை ஜாதிப்படி மாற்றம் கிடையாது. எல்லா ஜாதிகளிலுமே ஒரே முறைப்படி வேஷ்டி கட்டமாட்டார்கள். ஒவ்வொரு ஆண்களும் இளவயதில் வேஷ்டி கட்ட ஆரம்பித்ததிலிருந்து இடதுபக்கம் கட்டினால் அவர்கள் எப்போதும் இடதுபக்கந்தான் கட்டுவார்கள். வலது பக்கம் கட்டி பழக்கப்பட்டவர்கள் எப்போதும் வலது பக்கந்தான் கட்டுவார்கள். மற்றபடி குறிப்பிட்டபடி

வலதுபக்கம் வேஷ்டி கட்டும் ஜாதிகளோ இடது பக்கம் வேஷ்டி கட்டும் ஜாதிகளோ இல்லை.

குறிப்பு: எங்கள் வீட்டில் நான் (சுந்தரம்) இடது கைபக்கந்தான் வேஷ்டி கட்டுகிறேன். அது சிறுவயது முதல் என் பழக்கம். ஆனால், அண்ணன் முத்து அவர்கள் வலது கை பக்கந்தான் வேஷ்டி கட்டுகிறார். அது அவருடைய சிறு வயது முதல் ஏற்பட்ட பழக்கம். இப்படி எல்லா ஜாதிகளிலுமே உண்டு.

சில மனிதர்கள் வலதுகை பக்கமும் வேஷ்டி கட்டுவார்கள் இடது கைபக்கமும் வேஷ்டி கட்டுவார்கள். இது அவர்களுடைய சிறு வயது முதல் ஏற்பட்ட பழக்கந்தான்.

மற்றபடி ஜாதி முறைப்படி வேஷ்டி கட்டுவதில் மாறுதல்கள் இல்லை.

11 கேள்வி

பதில்: மாதத்தில் இருமுறை வரும் ஒவ்வொரு 15 நாட்களிலும் அதன் 8 வது நாள் என்ற முறையில் எந்தத் தெய்வத்திற்கும் சம்மந்தப் படுத்த முடியாது. அந்த நாட்களின் பெயரைக் கொண்டே அந்த நாள் எந்தத் தெய்வத்திற்கு உகந்தது என்று சொல்ல முடியும்.

மேலும், செவ்வாய் கிழமைக்கும், மாரியம்மனுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லையென்று சுந்தரக்குருக்கள் அவர்கள் சொல்கிறார். ஆனால், செவ்வாய் கிழமைக்கும் மாரியம்மனுக்கும் தொடர்பு இருக்குமென்றே நான் நினைக்கிறேன். ஆனால், அது எந்த முறையில் தொடர்பு இருக்குமென்று நானும் சொல்ல முடியவில்லை.

21 வது கேள்வி.

பதில்: வலக்கை, இடக்கை ஆகிய ஜாதிகளில் 18, 9 ஆகிய எண்களை குறிக்கும் ஜாதிகள் எவைகள் என்பது தெரியவில்லை. இதுபற்றி யாரைக் கேட்டாலும் "தெரியாது" என்ற ஒரே பதில்தான் சொல்கிறார்கள்.